பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 08 சனிக்கிழமை (24-10-1992) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 331

# கொழும்பில் "கறுப்பு வெள்ளி" பெரும் கலவரத்தில் முடிந்தது!

## மருதானையில் கண்ணீர்ப்புகைக் குண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள், பொலீஸார் பலர் காயம்

கொழும்பு, அக்டோபர் 24

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த "கறுப்பு வெள்ளி" ஹர்த்தால் அழைப்பினால் கொழும்பில் நேற்று பெரும் கலவரம் இடம்பெற்றது.

மருதானை பெரிய பள்ளிவாசல் சுற்றாடலில் ஏற்பட்ட கலவரத்தை அடக்க பொலீஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். அங்கு ஏற்பட்ட களேபரத்தில் பொலீஸார் பலரும், ஆர்ப்பாட்டக்காரர்கள் பலரும் காயமடைந்தனர்.

பொலன்னறுவையில் நான்கு கிராமங்களில் முஸ்லிம்கள் பலர் கடந்த 15 ஆம் திகதி அதிகாலை இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டிக்கும் முகமாக — நேற்று வெள்ளிக்கிழமை தினத்தை கறுப்பு வெள்ளியாக அனுஷ்டிக்குமபடி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அழைப்பு விடுத்திருந்தது தெரிந்ததே.

"கறுப்பு வெள்ளி" இழக்கின் பெரும் பரபரப்பை ஏற்படுத்தவில்லை.

ஆனால் தலைநகர் கொழும்பில் நேற்று பெரும் பதற்றம் நிலவியது.

மருதானை பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற தொழு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் குண்டு வெடிப்பு

கொழும்பில் உள்ள அரச வீடமைப்புத் திட்டம் ஒன்றில் சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்று நேற்று வெடித்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

இந்தச் சம்பவத்தில் ஒரு பெண் காயமடைந்தார் எனப் பொலீஸார் தெரிவித்தனர் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டது. (ஒ-எ)

## மோதல்

யாழ்ப்பாணம், அக். 24

வலி. வடக்குப் பகுதியில் நேற்று மாலை சுமார் 6 மணியில் இருந்து தொடர்ந்து ஒரு ஒரு மணி நேரம் வரையில் கடும் மோதல் இடம்பெற்றதாக அறியவந்தது. (ஒ-126)

## நாடாளுமன்றை நேற்று எதிரணியினர் பகிஷ்கரிப்பு

கொழும்பு, அக். 24

நேற்று நடந்த நாடாளுமன்றக் கூட்டத்தை எதிர்க்கட்சி எம்.பிக்கள் பகிஷ்கரித்தனர்.

ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கும் வகையில் இப் பகிஷ்கரிப்பு நடத்தப்பட்டதாக சுதந்திரக்கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எதிரணியினரின் பகிஷ்கரிப்பை அடுத்து நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டது. (ஒ-எ)

## யாழ்ப்பாணத் தமிழர் 11 பேர் நீர்கொழும்புச் சிறையில்!

யாழ்ப்பாணம், அக். 24

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள —யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த — 11 பேரின் விபரங்கள் நேற்று யாழ். அரச அதிபருக்குக் கிடைத்துள்ளன.

புத்தளம் தடுப்புக் காவல் நிலையத்தில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த எவரும் இல்லை என்றும் —

அனுராதபுரம், மட்டக்களப்பு தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் விபரங்கள் பின்னர் அனுப்பப்படும் என்றும் அரச அதிபருக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்புச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 11 பேரின் விவரம் வருமாறு:- கே. கணபதிப்பிள்ளை, வி. சிவசுப்பிரமணியம், எம். ரூபகுமார், வி. மோகன்ராஜ் ஜே. கிங்ஸ்லி நேசராஜ் பி. சயீவன், கே. ரவீந்திரா, ஏ. றொபேட், ஏ. ராஜேந்திரன் எஸ். இராஜதுரை, ரி. சுப்பிரமணியம். (உ)

## அக்டோபர் மாதத்துக்கு மேலும் ஒரு வார நிவாரணம்

யாழ்ப்பாணம், அக். 24

இடம்பெயர்ந்தோருக்கு— அக்டோபர் மாதம் — மேலும் ஒருவார நிவாரணம் கிடைக்கவிருக்கிறது.

இது தொடர்பான பணிப்புரை நேற்று யாழ். செயலகத்துக்குக் கிடைத்துள்ளது.

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் கடந்த செப்டம்பர் முதலாம் திகதி முதல் 50 வீதமாகக் குறைக்கப்பட்டதும்—

பின்னர் அக்டோபர் 15 ஆம் திகதி முதல் முழுமையாக வழங்குமாறு உத்தரவு விடுக்கப்பட்டதும் தெரிந்தவையே.

இந்த உத்தரவை அடுத்து யாழ். மாவட்டத்தில் அக்டோபர் மாதத்துக்கு முதலாம் திகதியில் இருந்து 15 ஆம் திகதி வரை ஒருவட்ட — ஒரு வார — நிவாரணமும் —

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரத்து 250 கைதிகளுக்கு தீபாவளியை ஒட்டி விடுதலை

கொழும்பு, அக். 24

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அதிகாரத்தின் கீழ் ஆயிரத்து 250 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

நீதி, உயர்கல்வி அமைச்சர் ஜனாப் சாகுல் ஹமீத்தின் சிபார்சின் பேரில் இதற்கான உத்தரவை ஜனாதிபதி பிரேமதாஸா பிறப்பித்துள்ளார்.

அபராதப் பணத்தைச் செலுத்தத் தவறியதற்காக சிறைவாசம் அனுபவிக்கும் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள்.

ஏனைய குற்றச் செயல்களுக்காக சிறைத் தண்டனை அனுபவிக்கும் கைதிகளின் தண்டனைக் காலம் ஆண்டுக்கு 3 வாரங்கள் வீதம் குறைக்கப்படும்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படும் — இவ்வாறு ஜனாதிபதியின் [illegible] யில் தெரிவிக்கப் [illegible]

## குடத்தனையில் குண்டு வீச்சு! 2 பெண்கள் பலி; 4 பேர் காயம்!

வடமராட்சி, அக். 24

வடமராட்சியில், குடத்தனை, ஆனைவிழுந்தான், உபயகதிர்காமம் பகுதிகள் மீது நேற்றுக் காலையும் நண்பகலும் ஸ்ரீலங்கா பொம்மர்கள் நடத்திய கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு பெண்கள் உயிரிழந்தனர். அதே குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு இளம் பெண்ணும், வயோதிப மாது ஒருவரும் மற்றும் இருவரும் படுகாயமடைந்தனர். மூன்று ஓலைக் கொட்டகைகள் நாசமாகின.

காலை 9.15 மணியளவில் திடீரென வடமராட்சிப் பகுதியை வட்டமிட்ட நான்கு பொம்மர்கள் மணற்காடு குடத்தனை மேற்குப் பகுதியில் அடுத்தடுத்து எட்டுக் குண்டுகளை வீசின.

மிகவும் பின்தங்கிய கிராமப் பகுதியான குடத்தனையில் — மக்கள் நெருக்கமாகக் குடியிருக்கும் — ஓலைக் குடிசைகள் அமைந்திருந்த பகுதிகள் மீதே குண்டுகள் வீசப்பட்டன.

பொம்மர்கள் ஒவ்வொரு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியை விடுவிப்பு

யாழ்ப்பாணம், அக். 24

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள இளவாலைப் பிரதேசத்திலிருந்து இளம் ஆசிரியை ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

நிர்மலா ஜோசேப் என்ற அந்த ஆசிரியை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளின் ஏற்பாட்டில் "குமண" கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு கூட்டிவரப்பட்டார்.

செல்வி நிர்மலா யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியை ஆவார். (உ-3-165)

## அறுவர் நயினாதீவு சென்றனர்

யாழ்ப்பாணம், அக். 24

யாழ்ப்பாணத்தில் இருந்து ஆறு பேர் நேற்று நயினாதீவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

பிரசவத்துக்காக நயினாதீவில் இருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்த இளம் தாய் ஒருவரும் அவர்களில் அடங்குவார்.

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற "குமண" கப்பல்மூலம் இந்த ஆறுபேரையும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் நயினாதீவுக்கு அனுப்பி வைத்தனர். (உ-3)

## பொருள் இறக்கும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 24

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் "குமண" கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகின.

பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வள்ளங்களுக்கு 'ஒயில்' வழங்குவதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக நேற்று முன்தினம் [illegible] கள் தடைப்பட்டன என்பது [illegible]

## நாகர்கோவிலில் நேற்று காவல் பணிமனை திறப்பு

யாழ்ப்பாணம், அக். 24

தமிழீழ காவல் துறையின் நாகர்கோவில் பிரதேசத்திற்கான காவல் பணிமனை நேற்றுக் காலை 7 மணிக்கு கடற் புலிகளின் தளபதி திரு. கங்கை அமரனால் திறந்து வைக்கப்பட்டது.

தமிழீழ தேசியக் கொடியை தளபதி கங்கை அமரனும், காவல் துறைக் கொடியை காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசனும் ஏற்றிவைத்தனர்.

அதைத் தொடர்ந்து தென்மராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி கலை கடற் புலிகள் மூத்த உறுப்பினர் திரு. முத்தண்ணா ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைக்க தளபதி கங்கை அமரன் காவல் பணிமனையைத் திறந்து வைத்தார்.

இந் நிகழ்ச்சியில் கடற்புலி மகளிர் படைத் தளபதி செல்வி நளாயினி, கடற்புலி யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. மறவன் உட்பட இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து

(5 ஆம் பக்கம் பார்க்க)

## உதைபந்தாட்ட வீரர்கள் வீதிகளில் அடிதடி, ரகளை!

### நேற்று மாலை நகரில் பரபரப்பு

யாழ்ப்பாணம், அக். 24

யாழ். நகரில் இரு உதைபந்தாட்ட அணிகளின் வீரர்கள் மற்றும் ஆதரவாளர்களிடையே நேற்று ஏற்பட்ட தகராறு கோஷ்டி மோதலாக மாறி பெரும் கலவரமாக உருவாகும் நிலை ஏற்பட்டதால் யாழ். நகரில் நேற்று மாலை பெரும் பரபரப்பு நிலவியது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை அடுத்தே மோதல் ஏற்பட்டது.

ஏற்கனவே முன்பு நடைபெற்ற ஆட்டங்களின் முடிவில் தமக்குள் மோதிக் கொண்ட பாஷையூர், நாவாந்துறைப் பகுதிகளைச் சேர்ந்த இரு பிரபல விளையாட்டுக் கழகங்களின் ஆதரவாளர்களே நேற்றும் கோஷ்டி மோதலில் ஈடுபட்டனர்.

நேற்று முதலில் நடைபெற்ற ஆட்டத்தில் விளையாடிவிட்டு மைதானத்திலிருந்து வெளியே வந்த ஒரு அணியைச் சேர்ந்த வீரர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

வனம் ஒரு நாட்டின் தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலியில் இருந்து விதை உருளைக்கிழங்கு

யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு, இத்தாலியில் இருந்து இறக்குமதியாகும் "டெசறி'' இன விதை உருளைக்கிழங்கு கிடைக்கவிருக்கிறது.

இது தொடர்பான தகவல் நேற்று யாழ். செயலகத்துக்குக் கிடைத்தது.

உள்ளூர் விதை உருளைக்கிழங்கே இம்முறை யாழ். மாவட்ட விவசாயிகளுக்குக் கொழும்பில் இருந்து அனுப்பப்படவிருப்பதாக முன்னர் தகவல் வெளியாகி இருந்தது; இதனால் விவசாயிகள் விதை உருளைக்கிழங்கைப் பெறுவதற்கு பணம் செலுத்தாமல் பின்னடித்து வந்தனர்.

இம்மாத இறுதியில் கொழும்பு வந்து சேரும் இத்தாலி விதை உருளைக்கிழங்கு கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

# மக்கள் வங்கியில் 22 பேருக்கு எழுதுவினைஞர் நியமனம்

யாழ்ப்பாணம், அக். 24

யாழ் மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் உள்ள 22 எழுதுவினைஞர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவிருக்கின்றன.

இது தொடர்பான அறிவித்தலை மக்கள் வங்கித் தலைவர், திட்டமிடல் அமைச்சுக்கு வழங்கியுள்ளார்.

வங்கியாளர்களுக்காக நடத்தப்பட்ட பரீட்சையில் சித்தி படைத்தவர்களைக் கொண்டு இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு மக்கள் வங்கித் தலைவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இது தவிர, கிளிநொச்சி மாவட்டத்தில் 4 வெற்றிடங்களும், மன்னார் மாவட்டத்தில் 2 வெற்றிடங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 13 வெற்றிடங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 வெற்றிடங்களும் நிரப்பப்படவிருக்கின்றன [உ-3]

## உற்சவங்கள்

யாழ்ப்பாணம், அக். 24

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை தீபாவளி தினத்தன்று கேதார கௌரி விரத விழா நடைபெறும். அன்றைய தினம் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவரின் ''அர்த்த நாரீஸ்வரி'' என்ற நூல் வெளியீடும் இடம்பெறும்.

★ ★ ★

தெல்லிப்பழை கோவிற்புலம் அண்ணமார் (வைரவர்) கோவிலில் தீபாவளியை முன்னிட்டு நாளை பகல் விசேட பூசையும், பட்டுச் சாத்துதலும் இடம்பெறும்.

★ ★ ★

தென்மட்டுவில் கோரக்கேணி கந்தசுவாமி கோவிலின் கந்தசஷ்டி விழா முதன் முறையாக கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாக உள்ளது.

★ ★ ★

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் கேதார கௌரி விரதத்தின் இறுதி நாளான நாளை விநாயகப் பெருமானும், வில்வநாத சுவாமியுடன் கூடிய விசாலாட்சி அம்மனும் வீதியுலா வந்து அருள்பாலிப்பர்.

★ ★ ★

யாழ். வண்ணைநகர் காங்கேசன்துறை வீதி ஸ்ரீ கதிரேசன் கோவிலில் கந்தசஷ்டி விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் 31 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

தினமும் காலை 7 மணிக்கு ஸ்நானாபிஷேகம், விசேஷ பூஜை பிற்பகல் 4 மணிக்கு ஷண்முகார்ச்சனை, வசந்த மண்டப பூஜை, திருவுலா என்பன இடம்பெறும்.

[த-10-51-31-152]

★ ★ ★

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் நாளை தீபாவளித் தினத்தன்று விசேட அபிஷேகம், உற்சவம் ஆகியவற்றைத் தொடர்ந்து விரதம் அனுஷ்டிப்போருக்கு கௌரி காப்பு வழங்கும் வைபவம் இடம்பெறும். [உ-31]

★ ★ ★

திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் நாளை கௌரி காப்பு திருவிழாவை ஒட்டி பிற்பகல் 2 மணிக்கு விசேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜையும் அம்பாள் வீதியுலாவும் இடம்பெறும்.

மாலை 6 மணிக்கு கௌரி விரதம் அனுஷ்டிப்போருக்கு காப்புகள் வழங்கப்படும். (உ)

## இன்று

சாவகச்சேரி, அக் 24

தென்மராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் அலுவலகம், இன்று சனிக்கிழமை, சாவகச்சேரி ரயில் நிலைய வீதியில், திறந்து வைக்கப்படும். பிரதேச செயலாளர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை அலுவலகத்தைத் திறந்துவைப்பார். (இ-31)

# இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், அக். 24

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே யாழ். கல்வித் திணைக்களம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நான்கு ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

### மட்டுவிலில்

மட்டுவில் சந்திரபுர வைத்தவரோதயா மைதானத்தில் நடைபெறும் 17 வயதுப் பிரிவு ஆட்டத்தில் அருணோதயாக் கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்து அணி மோதும்.

அங்கு நடைபெறும் 19 வயதுப் பிரிவு ஆட்டத்தில் உடுப்பிட்டி அ. மி. க. அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்து அணி மோதும்.

### கொக்குவில் இந்துவில்

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் 17 வயதுப் பிரிவு ஆட்டங்களில் மானிப்பாய் இந்து அணியை எதிர்த்து ஹாட்லி அணியும், வைத்தவரோதயா அணியை எதிர்த்து சென் ஜோசப் அணியும் மோதும்.

# பொலன்னறுவைச் சம்பவம்: 22 படையினர் மற்றும் 91 பேர் இன்னும் மருத்துவமனையில்

கொழும்பு, அக். 22

பொலன்னறுவையில் கடந்த வாரம் நடத்தப்பட்ட தாக்குதலில் காயம் அடைந்தோரில் 91 பொதுமக்களும் 22 படையினரும் இன்னும் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் காயம் அடைந்த பொதுமக்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபாவும், படையினருக்கு தலா ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி நேற்று முன்தினம் அங்கு சென்று அவர்களைப் பார்வையிட்டார். [இ-10]


## தீபாவளிப் பெருவிழா

இடம்: ஏழாலை தெற்கு களபாவோடை வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்.

காலம்: 25 - 10 - 1992 ஞாயிற்றுக்கிழமை.

காலை 8-00 மணிக்கு விசேட பூஜையுடன் ஆரம்பமாகி ஒளிதீபம் ஏற்றுதல், சுவாமி வீதிவலம் வருதல், அன்னதானம், அன்னையின் அரவணைப்பில் வளரும் சிறுவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

விசேட சொற்பொழிவுகள்:

1. பேராசிரியர் க. சிற்றம்பலம். (தலைவர், சரித்திரவியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்.)
2. திரு ப. கணேசலிங்கம். (இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.)

- தேவஸ்தானம்.

[23002]

## தீபாவளியை முன்னிட்டு உதைபந்தாட்டப் போட்டி

அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி.

காலம்: 25 - 10 - 92 (ஞாயிறு) பி. ப. 2-30 மணி

★ பாரதி A எதிர் கொய்யாத்தோட்டம் A
★ சென் அன்ரனிஸ் A எதிர் சென்றொக் A
★ பாடும்மீன் A எதிர் யங்றோயல்

இடம்:
கோல்ட்ஸ்ரார் மைதானம்
கோப்பாய் வடக்கு.

(23009)

## பேராதனை பல்கலைக்கழகத்துக்கான வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

G. A. Q. - 93 / 94

விரிவுரைகள் ஆரம்பம்: 24 - 10 - 1992

8-00 மணி

பல்கலைக்கழகத்துக்கான சகல பதிவுகளும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

★ விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்;

எஸ். அருள்நங்கை (நிர்வாகி).

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

[இ-3715]

## வாழ்நாள் புகைப்படப் பிடிப்பாளர்கள்

★ லைவ் ★ போட்டோ ஸ்ருடியோ (LIFE PHOTO STUDIO)

இல்லாலை, மாதகல்.

தற்போது மானிப்பாயில் மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள இடத்தில் இயங்குகிறது என்பதை அறியத்தருகிறோம்.

உங்கள் புகைப்படத் தேவைகள், ஆலோசனைகள் அனைத்திற்கும்

லைவ் போட்டோ கிராபேர்ஸ், LIFE PHOTO GRAPHERS,

''குக கிருபை,'', (மகளிர் கல்லூரி அருகில்), மானிப்பாய்.

(23008)


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு: 05-01-1936

அந்நியர் அழிப்பு: 24-10-1987

### அமரர் சி. கறுப்பையா

குடும்பத்தின் குன்றானாய், குல விளக்கின் சுடரானாய் மலையின் சிகரமானாய், தலைமகனே நீ மறைந்து ஐந்தாண்டு சென்றிடினும் புரண்டு துடிக்கின்றோம், துன்பத்தின் எல்லையில்.

உமது பிரிவால் துயருறும்,

மனைவி கமலாம்பிகை
பிள்ளைகள் - ரவீந்திரன், ஜெயக்குமார், சாந்தி, ஜெயபாரதிராஜா.

மரக்காலை உரிமையாளர்.
க. கமலாம்பிகை,
70, கன்னாதிட்டி வீதி,
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.


## எங்களுக்கும் ஒரு தீபாவளி

# கஸ்ரோ நினைவு தீபாவளிப் பொழுது

காலம்: 1992-10-25 ஞாயிறு தீபாவளித் தினம்

இடம்: திருநெல்வேலி நிறைவாழ்வு இல்ல கலாமண்டபம்

காலை 10-30 – 11-30 பண்ணிசை அரங்கு; தேவார இசைமணி திருஞானசம்பந்தன்

மாலை 3-30 — 7-00 மணிவரை சிறப்புக்கலை நிகழ்ச்சிகள்

சிறப்பு விருந்தினர்கள்:

திரு. செ. பத்மநாதன்
திட்டப் பணிப்பாளர்
யாழ் செயலகம்

திரு. இ. பரதன்
பொறுப்பாளர்
நிதர்சனம்

திருமதி க. சிவசிதம்பரம்
பிரதி ஆணையாளர்
சமூகசேவைத் திணைக்களம்

சிறப்புக் கலை நிகழ்வுகள்

நல்லதோர் வீணை செய்தே-
செல்வி சர்மிலா பாலேந்திரன்.

எங்களுக்கும் ஒரு தீபாவளி-
நிறைவாழ்வு இல்லச் சிறார்.

நடனம் ஆடினார்-
செல்வி சுகந்தி மகேந்திரராஜாவின் மாணவிகள்.

கண்ணீரைத் துடைத்துக்கொள்-
ஆக்க இசை அரங்கம்.
ஆக்க இசைக் கலைஞன் என். சண்முகலிங்கன்.
சிறுவர் திரைப்படம்

இந்தப் பொழுதை அர்த்தப்படுத்தவும் எங்கள் இல்லமும் உள்ளமும் நிறைய அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

பிரார்த்தனைகளுடன்,
நிறைவாழ்வு இல்லச் சிறார்கள்,
சைவவித்தியாவிருத்திச் சங்கம்.
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

(இ-3682)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயந்தி தின விழா



ஸ்ரீ முருகன் அருள் மார்கண்டு சுவாமிகளின் 65ஆவது ஜெயந்தி தின விழாவான (24-10-1992) இன்று சுவாமிகளின் அருளும், ஆசியும் பெற்றிருக்கும் முருகன் அடியார்கள் வெகு சிறப்பாக இவ்விழாவினை மானிப்பாய் முருகன் அருள் நிலையத்தில் கொண்டாடுகின்றார்கள்.

- முருகன் அடியார்கள்.

[5518]

# 5 ஆம் வருட நினைவஞ்சலி

அமரர்

## சுப்பிரமணியக்குருக்கள் ரவிநாதன்

[கண்ணன்]

தோற்றம்: 31-08-1957 மறைவு: 21-10-1987

திதி: 24 — 10 — 1992

சந்தம் வீசும் வாலிப வயதில்
நீ எம்மைப் பிரிந்து வருடங்கள்
ஐந்து ஆனாலும், எம் மனதில் உன்
நினைவு என்றும் வாலிபமே!

நீங்காத நினைவுகளுடன் வாழும்:
அப்பா, அம்மா, தம்பி,
தங்கைமார், உறவினர்கள், நண்பர்கள்.

77/2 A.V. றோட்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (22990)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 27 — 12 — 1965



மறைவு: 21 — 10 — 1987

செல்வன்

## சுப்பிரமணியம் சுந்தரேஸ்வரன்

(சந்திரன்)

திதி: சதுர்த்தசி 24 — 10 — 1992

அன்பின் சந்திரனே!
ஆண்டவனே படைத்தான் - உனை
மீண்(டும்) டவனே எடுத்து விட்டான்
வேண்டி நிற்கின்றோம் உனக்காக
யாண்டு மடைக உன் ஆத்மா

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
சிறியதந்தையர், சிறியதாய்மார் மாமன்மார்,
மாமிமார், மச்சான், மச்சாள்மார், சிந்து
உற்றார், உறவினர், நண்பர்கள்.

இணுவில் மேற்கு,
இணுவில். (சி-3617)

மருத்துவ வசதியின்றி நோயினால்

# இறந்தவர்களின் சடலங்களை குழி தோண்டிப் புதைத்தோம்

## படையினரிடமிருந்து மீண்டு வந்த மாணவர் தகவல்

வடமராட்சி, ஆக். 24

மருத்துவ மற்றும் சுகாதார வசதியின்றி நோயினால் இறந்த நான்கு வயோதிபர்களின் உடல்களை இளவாலை கன்னியர் மட முகாமுக்கு அருகே உள்ள வெளிகளில் நாங்களே குழிதோண்டிப் புதைத்தோம்.

இராணுவத்தின் பிடியில் இருந்து விடுதலை பெற்று கடந்த வியாழனன்று இங்கு வந்து சேர்ந்த அந்தோனிப்பிள்ளை இமானுவேல் என்ற மாதகல் மாணவர் உதயன் செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் கடந்த ஆகஸ்டில் நடந்த இராணுவ நடவடிக்கைகளின் போது இளவாலைப் பகுதியில் வைத்து இராணுவத்தினரின் பிடியில் சிக்கினார்.

படையினரிடம் சிக்கியுள்ள மக்களின் நிலை பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாம் தங்கியிருந்த இளவாலை கன்னியர் மட முகாமில் சுமார் முந்நூறு பேர் சிக்கியுள்ளனர். இம்முகாமுக்கு மருத்துவ, சுகாதார வசதிகள் எதுவுமே கிடையாது. அசுத்தத்தின் மத்தியில் வாழ்வதால் பலர் நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்நிலை நீடித்தால் இன்னும் பலர் நோயினால் பாதிக்கப்படுவர். இவ்வாறு நோயினால் இறந்த நான்கு வயோதிபர்களின் உடல்களை நாங்களே குழி தோண்டிப் புதைத்தோம்.

பயத்தினாலும், நோயினாலும் பலர் மன நிலை பாதிக்கப்பட்டு பைத்தியக்காரர்கள் போல் அலைந்து திரிகின்றனர்.

நாம் பரீட்சை எழுத வேண்டும் என்ற ஒரு நிலை எழுந்ததால் எமக்கு அங்கிருந்து வெளியேற சந்தர்ப்பம் கிடைத்தது ஆனால் அங்கே சிக்கியிருக்கும் ஒவ்வொருவரும் வெளியேறவே விரும்புகின்றனர்.

முன்னதாக இளவாலையில் வைத்து எம்மைக் கைது செய்த இராணுவத்தினர் இரண்டு வாரங்களின் பின்னர் எம்மை பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். நாம் இராணுவத்தினரிடமும், பொலீஸாரிடமும் மாறிமாறி அடியும், உதையும் வாங்கியே காலத்தைக் கழித்தோம் — என்றார். (த-165)

## விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஆக். 24

மெய்கண்டதேவர் திருநாளையொட்டி இன்றும், நாளையும் பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் விரிவுரைகள் நடைபெறும்.

மூதறிஞர் க.சி. குலரத்தினம், சிந்தாந்தமணி, மு. திருஞானசம்பந்த பிள்ளை ஆகியோர் விரிவுரையாற்றுவர்.

மெய்கண்டதேவர் சிவஞான சைவசித்தாந்த உயர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இவ்விரிவுரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருவாசகமன்றத்தில் குருவழிபாடும் இடம் பெறும். (த-3)

N.C.A.
ஆத்தியடி, பருத்தித்துறை.
A/L 93
கலை, வர்த்தகம்
Eco - க. கலாசரன் / K. ஸ்ரீரங்கநாதன்
Acc - S. K பிரபாகரன்
Log. - A. லிக்கி
Com. - ரகுநாதன்
★ வடமராட்சியின் மிகச் சிறந்த ஆசிரியர்களின் சேவையைப் பெற 8 ஆம் வருடப் பூர்த்தியாகும் இச்சந்தர்ப்பத்தில் அழைக்கின் நேரம்;
(கி/3725)

ஆண்டு 5 - 1993
(புலமைப் பரிசில் Aug 93)
இரண்டாவது பயிற்சிப் பரீட்சை
31 - 10 - 1992
(சனி)
இந் நிறுவனங்களில் நடத்தப்படும்.
Bond — யாழ்ப்பாணம்
Selin — இருபாலை
Pearl — நீர்வேலி
Kugan — ஆவரங்கால்
Modern — நெல்லியடி
Satha Pons — அல்வாய்
Y.M.C.A. — பருத்தித்துறை
Brilliant — சாவகச்சேரி
Vinyls — சுன்னாகம்
Paarathy — சித்தன்கேணி
Lukky — கட்டுடை
Bitsmans — மானிப்பாய்
Vinayahar — ஆனைக்கோட்டை
Keen — திருநெல்வேலி
Osslo — கச்சேரியடி
விவரங்களுக்கு:
Examination Unit,
BOND Institutes
யாழ்ப்பாணம்.
(கி-3621)

# நெஞ்சைவிட்டகலா நினைவலைகளின் மூன்றாம் ஆண்டு



அமரர்

## சபாபதி தங்கராசா

(பிரதம எழுதுவினைஞர் - நகர காவல் திணைக்களம், திருகோணமலை)

பிறப்பு: 1937-03-01 இறப்பு: 1989-10-28

திதி: 1992-10-24

தங்கமான இராசாவேயென்று தரணியில் இருந்தீரே!
தங்க இரதத்தில் ஏற்றித் தரணியைச் சுற்றி வந்தீரே!
முன்னை வினையால் மூண்டநெருப்பு
அணைந்து ஆண்டு மூன்றாகுதையா
அன்புடன் வாழ்ந்த உமக்கு எமது
இருதயம் காணிக்கை ஐயா!

உமது பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி.

கதுமலை வீதி,
தாவடி. [22997]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (சேவல்) தொகையாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு ஜீவன், மத்திய சந்தை, மானிப்பாய். (5511)

மிருதங்கங்கள் பல தரப்பட்ட அளவுள்ள திறமான நல்ல நாதமுடையவை விற்பனைக்கு உண்டு. வாத்திய திருத்த வேலைகளும் நல்ல முறையில் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்: கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், 192/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (22975)

கடைக்குரிய கண்ணாடி அலுமாரி, சோக்கேஸ், தட்டச்சு இயந்திரம் (ஆங்கிலம்), மரத்தளபாடங்கள் (கட்டில், அலுமாரி, சோக்கேஸ்), மண்ணெண்ணெய் அடுப்பு, T. V. றேடியோக்கள், ஒலி, எகிகோடியன், கிளாஸ், செரமிக் பொருட்கள், சைக்கிள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள், புதிய ரெடிமேட் ஆடைகள் விற்பனைக்கு உண்டு. 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (22988)

வெள்ளை நிற பொமனேரியன் ஆண்/பெண் நாய்க்குட்டிகள் (மூன்று மாதம்) விற்பனைக்கு உண்டு J. அல்பிறட், 25, பார்க் றோட் குருநகர், யாழ்ப்பாணம். (22998)

## நல்லினத்தோட்டம்

விளாத்தியில் ஒட்டிய ஒரு வருடத்தில் பலன்தரும் திடகாத்திரமான சிறந்த இனத் தோடங்கன்றுகள் மற்றும் பதிவைத்த பாண்டோக் கொய்யா நாற்றுகள், எலுமிச்சை நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. முந்துவோருக்கு பூக்கள், காய்கள் அடங்கிய நாற்றுக்கள் வழங்கப்படும் இடம்: துரைஐயா, நிலாவிரையடி, நவகிரி புத்தூர். (5408)

## இறைச்சிக் கோழி

சிறப்பு விருந்துகளுக்கு மிக உகந்த புறொயிலர் முறைப்படி வளர்க்கப்பட்ட இறைச்சிச் சேவல்கள் விற்பனையாகின்றன. யாழ் வீதி, உரும்பராய்ச் சந்தி (அன்னை பூபதி கலையரங்கம் அருகில்) (22974)

## உடன் விற்பனைக்கு

Hy-Line + prima + Babira வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டு குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (5514)

## தேவை

வெற்று லக்ஸ்பிறே பை கொள்வனவு செய்யப்படுகின்றது. நியூ லங்கா பாம், கே. கே. எஸ். வீதி, இணுவில்: உடன் தொடர்பு கொள்ளவும். (5501)

## திருமண சேவை

33 வயது பட்டதாரிக்கு சைவ ஆசிரிய மணப்பெண்ணை பெற்றோர் விரும்புகின்றார்கள். வேறு பல மணமக்கள் ஜாதகங்களுக்கு: சுவாமியார் இராசகுலசிங்கம், 53/5, அன்னசத்திர ஒழுங்கையை நாடவும். சந்திப்பு 10-00 — 3-00 மணி வரை. (ஞாயிறு தவிர) (23004)

## தரன் ஸ்ருடியோ

குறைந்த சலார், குறித்த நேரம் தரன் ஸ்ருடியோ, தீபாவளித் திருநாளை முன்னிட்டு 9-10-92 — 27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலைகளுக்கு: இல. 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (22820)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? ஆமாம் உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடனே கிடைக்கும். சந்திக்கும் நேரம்: தினமும் காலை 8-30 முதல் 12-30 வரை. தினமும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை. த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (22994)

## மரக்கன்றுகள்

பயனுள்ள மரக்கன்றுகள் அன்பளிப்பு. பாவிடா வெற்றுப் பக்கற் 25 அல்லது மில்க்வைற் சவர்க்கார மேலுறை தந்து ஒரு மரக்கன்றைப் பெறுங்கள். மில்க்வைற். (சி-3610)

## ராகு, கேது மாற்றம்

தீபாவளி வெளியீடுகள், பாடசாலைப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், அலுவலக உபகரணங்கள், ராகு, கேது, செவ்வாய் மாற்றங்கள் விற்பனைக்குண்டு மது புத்தகசாலை, கொக்குவில் சந்தி. மொடேர்ன் ஸ்ரோர்ஸ், நெல்லியடிச்சந்தி. (22999)

## இலவச திருமண சேவை

28 வயது, பூசம், செவ்வாய் 4, U. K. இல் Electrical Electronic Engineer வேலை செய்பவருக்கு தகுந்த மணமகள் தேவை. திருமணம் இலங்கையில். தொடர்பு: ஞாயிறு காலையில்: து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (22957)

## கைப்பற்றப்பட்டது

கொழும்பு, அக். 24

கலைக்கப்பட்ட வடக்கு — கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜனாப் சேகு இஸ்ஸதீனால் பாவிக்கப்பட்டு பின்னர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்று மருதானைப் பொலீஸாரால் கடந்த வியாழன் கைப்பற்றப்பட்டது. (த-எ)

# மாற்றம்

## காலாண்டு மக்கள் சஞ்சிகை வெளியீட்டு விழா

தலைவர்: கலாநிதி காரைசுந்தரம்பிள்ளை
இடம்: கம்பன்கோட்டம், நல்லூர்
காலம்: 24-10-1992 (இன்று) சனி மாலை 3.00 மணிக்கு

"அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்"

வெளியீடு:
தமிழ்த்தாய் மன்றம்

(C/3616)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சோ. யோகசுந்தரம்

(முன்னைநாள் தபால் தந்தி ஊழியரும், யோகா மினிபஸ் உரிமையாளரும்.)

ஆண்டவன் படைப்பு: 09 — 11 — 1952

அந்நியன் அழிப்பு: 21 — 10 — 1987

திதி: 24 — 10 — 1992

ஐப்பசித் தீபாவளியாம் துவாதசித் திதியதனில்
இப் புவியை விட்டு நீ மறைந்து விட்டாய்!
எப்பொழுதும் உன் பூமுகத்தை நினைந்து நாம்
இப் புவியதனில் புழுவாகத் துடிக்கின்றோம்!

"எம் நெஞ்சிருக்கும் வரை உம் நினைவிருக்கும்"

- குடும்பத்தினர்.

"யோகா இல்லம்",
24/3, 2ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (5516)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 24 — 07 — 1934

மறைவு: 22 — 10 — 1987

## கேசவன் நாராயண நாயர்

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி
ஆழ்துயில் கொண்ட தெய்வமே!
ஆண்டு ஐந்து ஆனதையா!
கோவில் கொண்ட தெய்வமென்றே - என்றும்
போற்றுகின்றோம் இன்றும் நாம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

மனைவி, பிள்ளைகள்,
மாமி, மருமக்கள்,
பேரன்.

18 கலைப்புலவர் வீதி,
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம். (23006)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 25 — 12 — 1972



இறப்பு: 20 — 10 — 1987

## இராசதுரை பிரபாகர்

திதி: 24 — 10 — 1992

பிரபா! ஐந்தாண்டு சென்றாலும், உன் நினைவு எங்களை விட்டு அகலாது.

உனது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்;

அன்பு அம்மா, அக்கா, உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

ஞானவைரவர் கோவிலடி,
உரும்பராய் தெற்கு,
உரும்பராய். (23001)

# 30ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 25 — 09 — 1905



உதிர்வு: 25 — 09 — 1992

## அமரர் நாகர் முருகர்

தங்கள் முழுநிறை வாழ்வில்
எங்கள் சிறப்பு நல்வாழ்வை அமைத்தீர்கள்.

உங்கள் பிரிவால் துயருறும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (5507)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பாடசாலை பிரச்சினைகள்

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான சுமார் 35 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களை கொழும்பிலிருந்து இங்கு எடுத்துவருவதற்கு கூட்டுப் படைகள் தலைமை அலுவலகம் அனுமதி மறுத்துள்ளது.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார்.

1990 ஜூன் யுத்தத்தின் பின்னர், யாழ். மாவட்டத்தில் இராணுவ அச்சுறுத்தலுக்கு உள்ளான பகுதிகளில் உள்ள பாடசாலைகள் பல மூடப்பட்டுவிட்டன. ஆயிரக்கணக்கான மாணவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மாணவர்கள் வேறு பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாலும்—

மூடப்பட்ட பாடசாலைகள் சில சுமுகமாக இயங்கிவரும் வேறு பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டதாலும் தற்போது யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் பெரும்பாலான பாடசாலைகளில் இட நெருக்கடி நிலவுகிறது.

சில பாடசாலைகளில் மாணவர்கள் தரையில் அமர்ந்து படிக்கிறார்கள். இரண்டு மூன்று வகுப்புகளுக்கு ஒரு கரும்பலகையும் பயன்படுத்தப்படுகிறது. சில பாடசாலைகளில் மர நிழல்களிலும் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஆகவே இப்படியான நிலைமையில் பாடசாலைத் தளபாடங்கள் மிகவும் அத்தியாவசியமானவை.

மாணவர்களின் அடிப்படை வசதிகளில் இவையும் அடங்குகின்றன.

இவற்றை எடுத்துவர அனுமதி மறுப்பது அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும். இது சகலராலும் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் தற்போது எதிர் நோக்கி உள்ள நெருக்கடிகள் தமிழ் மக்களின் கல்வித் துறையை வேரறுக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள திட்டமிட்ட சதியின் விளைவுகளே என்பதில் சந்தேகம் இல்லை.

பொருளாதாரத்துறையிலும், கல்வித்துறையிலும் தமிழ் மக்களை வீழ்த்திவிட்டால், அவர்களைப் பணியவைத்து விடலாம் — தான் நினைத்ததைச் சாதித்துவிடலாம் என்று அரசாங்கம் கருதுகிறது.

1970 ஆம் ஆண்டு தரப்படுத்தலுடன் ஆரம்பமான தமிழ் மாணவர்களின் கல்வித் துறை மீதான நசுக்குதல், காலத்துக்குக் காலம் பல்வேறு கட்டங்களைக் கடந்து, தற்போது இன்றைய இக்கட்டான நிலையை அடைந்துள்ளது.

இவற்றை எதிர்கொள்ளும் முக்கிய பொறுப்பை பெற்றோரே ஏற்க வேண்டும்.

தற்போதைய நெருக்கடிகளைச் சவாலாக ஏற்று எதிர்கொள்வதன் மூலம் வருங்காலச் சமுதாயத்தை அழிவுப் பாதையில் இருந்து காப்பாற்ற முடியும்.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளது போல், ஒவ்வொரு பெற்றோரும் பாடசாலை முகாமையாளராகத் தம்மைக் கருதிச் செயற்படுமிடத்து பாடசாலைகளின் பிரச்சினைகளில் பெரும்பாலானவற்றைத் தீர்க்க முடியும்.

### அக்டோபர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அக்டோபர் மாதம் 15 ஆம் திகதியில் இருந்து 31 ஆம் திகதி வரை இருகட்ட — இருவார நிவாரணமும் — வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்று புனர்வாழ்வு அமைச்சில் இருந்து யாழ். செயலகத்துக்குக் கிடைத்த உத்தரவில் அக்டோபர் மாதத்துக்கு மேலும் ஒருவார நிவாரணம் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த உத்தரவை அடுத்து அக்டோபர் மாதத்துக்கு முழு நிவாரணமும் — மொத்தம் நாலு வார கால நிவாரணமும் — வழங்கப்படவிருக்கிறது. (உ-3)

# ஓய்வூதிய வேலைகள் அனைத்தும் இனிமேல் மாவட்ட செயலகங்களில்

## புதிய நடைமுறை டிசம்பரில் அமுல்

யாழ்ப்பாணம், அக் 24

ஓய்வூதியம் சம்பந்தமான சகல கணிப்பீட்டு வேலைகளும் எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணத்திலேயே மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இதற்கான வணிப்புரை நேற்று யாழ். அரச அதிபருக்குக் கிடைத்தது.

யாழ். மாவட்ட ஓய்வூதியர்கள் சம்பந்தமான ஓய்வூதியக் கணிப்புகள் மற்றும் கொடுப்பனவு வேலைகள் யாவும் யாழ்ப்பாண செயலகத்தினாலேயே இனி மேற்கொள்ளப்படும்.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுபவர்கள் தமது திணைக்களம் மூலமாக யாழ். செயலகத்துக்குத் தமது ஆவணங்களை அனுப்பினால், கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு ஓய்வூதியம் உட்பட பணிக்கொடை சம்பந்தமான கொடுப்பனவுகள் யாவும் யாழ். செயலகத்தினால் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

தற்சமயம் ஓய்வு பெறுவோரின் பெயர் விவரங்கள், இலக்கம் ஆகியன அடங்கிய பட்டியலை விரைவில் கொழும்புக்கு அனுப்புமாறும் —

பட்டியல் கிடைத்ததும் அவர்கள் தொடர்பான ஓய்வூதியக் கோவைகள் யாழ். செயலகத்துக்கு அனுப்பப்படும் என்றும் யாழ். அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

ஓய்வூதியம் தொடர்பான புதிய நடைமுறை வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல அரச செயலகங்களுக்கும் டிசம்பர் முதலாம் திகதி முதல் மாற்றப்பட்டுள்ளதாக ஓய்வூதியப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-3)

### சேவைக்கால பயிற்சி

மருதனார்மடம் கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலைகளிலும் ஆண்டு 6 முதல் 11 வரை இந்து சமயம், சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு இன்றும், நாளை மறுதினம் திங்கட்கிழமையும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

இந்து சமய பயிற்சி வகுப்புகள் இன்றும், சமூகக்கல்வி பயிற்சி வகுப்புகள் திங்கட்கிழமையும் இடம்பெறும். (ஒ-152)

### நிறைவாழ்வு இல்ல தீபாவளிக் கதம்பம்

யாழ்ப்பாணம், அக். 24

சைவ வித்தியா விருத்திச் சங்க நிறைவாழ்வு இல்லச் சிறார்களின் தீபாவளிக்கதம்பம் சங்க மண்டபத்தில் நாளை காலையும், மாலையும் நடைபெறும்.

கலை நிகழ்ச்சிகள் மு.ப. 10.30 மணிக்கு ஆரம்பமாகும். இல்லச் சிறார்களின் சிறப்பு நிகழ்ச்சிகள் அப்போது இடம்பெறும். மாலையில் செல்வி சுகந்தி மகேந்திரராஜாவின் மாணவிகள் அளிக்கும் பரத நாட்டியம் பிரதான நிகழ்ச்சியாக அமையும். (அ)

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், அக். 24

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் இன்றும், நாளையும் இடம்பெற விருந்த கண்காட்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு அறிவித்துள்ளது. (ஒ)

### சம்பள கொடுப்பனவு

யாழ்ப்பாணம், அக். 24

''முரசொலி'' பத்திரிகை நிறுவன ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் இன்று காலை 9 மணிக்கு. அந்த நிறுவனத்தின் பணிமனையில் வைத்து வழங்கப்படும் என அந்த நிறுவனத்தின் கலைப்பாளர் (Liquidator) அறிவித்துள்ளார். (உ)

### பிரதேச செயலர்களுக்கு மேலதிக பொறுப்பு

யாழ்ப்பாணம், அக். 24

யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள் பிரதி உணவுக் கட்டுப்பாட்டாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உணவுத் தேவைகள் சம்பந்தமான அதிகாரங்களைக் கையாளும் வகையில் அவர்களுக்கு இந்த பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிக்கான உணவுத் தேவை, பகிர்வு போன்ற வேலைகளை இவர்கள் கவனிப்பர். (உ-3)

### நாகர்கோவிலில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டனர்.

இப் பணிமனையில் தாளையடி, உடுத்துறை, செம்பியன் பற்று, குடாரப்பு, மாமுனை, அம்பன், குடத்தனை, மணற்காடு ஆகிய பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் தமது புகார்களைப் பதிவு செய்யலாம் என அறிவிக்கப்படுகின்றது. (ஒ)

## தேர்தல் ஆட்சேபமனு:

# செலவு தொகை ரூ. 22லட்சம் பிரேமா சார்பில் மனு

கொழும்பு, அக் 24

அண்மையில் உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபமனு தொடர்பாக மனுதாரரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் இருந்து 22 லட்சத்து 14 ஆயிரத்து 11 ரூபா செலவுத் தொகையாக, அம் மனுவில் முதலாவது பிரதிவாதியாகக் காட்டப்பட்டிருந்த ஜனாதிபதி பிரேமதாஸ சார்பில் கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் சட்டத்தரணியான திரு. சின்னத்துரை சுந்தரலிங்கம் கடந்த புதன்கிழமை உயர் நீதிமன்றப் பதிவாளர் திரு. பந்துல அத்தபத்து முன்னிலையில் ரசீதுகளுடன் செலவுத் தொகை விவரங்களைத் தாக்கல் செய்தார் என்று அறிவிக்கப்படுகிறது. (த-எ)

## ''கறுப்பு வெள்ளிக்கிழமை''

# அஷ்ரப்பின் பிறந்த நாளை கொண்டாடும் ஓர் உத்தி!

## சுதந்திரக்கட்சி எம்.பி. கிண்டல்

கொழும்பு, அக். 24

அக்டோபர் 23 ஆம் திகதி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரபின் பிறந்த தினமாகும். அதனால் நாடு முழுவதும் கறுப்புக் கொடியையும் வெள்ளைக் கொடியையும், பறக்கவிட்டு அன்றைய தினத்தைக் கொண்டாட வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்.

சுதந்திரக் கட்சி எம். பி. ஹலீம் இஷாக் நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன் கண்ட தகவலை வெளியிட்டார்.

முஸ்லிம் மக்களின் ஏக தலைவர் தானே என்று ஜனாப் அஷ்ரப் கூறுகின்றார். அதைத் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் அவர் சொன்னார்.

'கறுப்பு வெள்ளி' தினம் அரசாங்கத்துக்கு எதிரானது அல்ல என்று முஸ்லிம் காங்கிரஸ் கூறியிருப்பதனால்தான் அவரது அமைப்புக்கு ஆதரவளிக்காமல் இருப்பது என்று சுதந்திரக் கட்சி தீர்மானித்தது என்றும் அவர் கூறினார்.

## வலி - வடக்கிலிருந்து

# இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவுவதற்கு நடவடிக்கை

வலி – வடக்கு, உதவி அரசாங்க அதிபர் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து இன்னல்படும் மக்களுக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுக்க, அவர்கள் தொடர்பான புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படவிருக்கின்றன.

வலி - வடக்கு புனர்வாழ்வுக்கழகம் மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

கழக தலைவர் திரு. எஸ். பரமநாதன் தலைமையில் இணுவிலில் அண்மையில் நடந்த கழகத்தின் விசேட கூட்டம் ஒன்றிலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வலி - வடக்கு பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் இன்னல்பட்டு வாழும் மக்களின் தொழில்நிலை, குடும்பநிலை, இருப்பிடவசதி போன்றவை குறித்த புள்ளிவிவரங்களை சேகரித்து — அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு, உதவிகளைப்பெற்றுக் கொடுக்க ஏற்பாடுசெய்யப்படும் என்று அத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் வாழும் குடிசைகளையும், முகாம்களையும் புனரமைப்பது தொடர்பாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (த - 68)

## சுதந்திரக் கட்சியின்

# தலைமை அரசியல் பிரிவை மூடும்படி சிறிமா உத்தரவு!

கொழும்பு அக்: 24

சுதந்திரக்கட்சியின் தலைமையக அரசியல் பிரிவு கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் உத்தரவின் மீது மூடப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு - மருதானையில் ரி. பி ஜாயா மாவத்தை—டார்லி வீதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகக் கட்டடத்தின் நான்காவது மாடியில் இயங்கிவந்த கட்சியின் அரசியல் பிரிவு கடந்த வியாழன் மூடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அக் கட்டடத்தில் உள்ள கட்சியின் தொழிற் சங்கம் மற்றும் இதர பிரிவுகள் வழமைபோல செயற்படும் என்றும் —

மூடப்பட்ட அரசியல் பிரிவு அலுவலகத்தில் இருந்த முக்கிய விவரக் கோவைகள் திருமதி பண்டாரநாயக்காவின் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த - எ)

### நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாம்

பொதுமக்கள் தாக்கப்படக் கூடிய பகுதிகளில் இராணுவம் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது.

இந்த நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை தற்போது வெளியிட முடியாது உள்ளது என்று கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத்முனசிங்க செய்தியாளரிடம் தெரிவித்தார். (த-எ)

### அரசுக்கு சிபார்சு

கொழும்பு, அக். 24

பாடசாலை நாட்களை 190 நாட்களாக அதிகரிக்கும்படி அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு வட்டாரச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (த-எ)

### அனுமதியும் வரவேற்பும்

யாழ்ப்பாணம், அக் 24

யாழ் பல்கலைக்கழக வெளிவாரி பயிற்சி நெறி மாணவர்களுக்கான அனுமதியும், வரவேற்பும் இன்று பிற்பகல் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது.

இன்று பிற்பகல் 2மணிக்கு புதிய ஆண்டு மாணவர்களுக்கும் —

தொடர்ந்து 3 மணிக்கு இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கும் — அனுமதியும், வரவேற்பும் இடம்பெறும். (த-3)

### ''மாற்றம்'' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், அக்: 24

தமிழ்த்தாய் மன்றத்தின் ''மாற்றம்'' காலாண்டு மக்கள் சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று பிற்பகல் மூன்று மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறும்.

கலாநிதி கார சுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மூதறிஞர் க. சி. குலரத்தினம், திரு. க. சிவராமலிங்கம் ஆகியோரின் ஆசியுரையும், வித்துவான் செசக்லே. யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை ஆகியோரின் சிறப்புரையும், யாழ். இந்து அதிபர் திரு அ. பஞ்சலிங்கத்தின் வெளியீட்டுரையும் இடம்பெறும். (த-3)

### குடத்தனையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தடவையும் இரண்டு குண்டுகள் வீதம் நான்கு முறை குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

இக்குண்டுவீச்சால் அப்பகுதியில் குடியிருந்த தில்லையம்பலம் தெய்வானை (வயது 75) என்ற வயோதிப மாது தலை பிளந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரது பேரமகளான முத்துலிங்கம் சிவபூரணம் (வயது 37) படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது அங்கு மரணமானார்.

உயிரிழந்த முத்துலிங்கம் சிவபூரணத்தின் மகளான ஜெய்குமாரி என அழைக்கப்படும் முத்துலிங்கம் உதயசுதா (வயது 16) தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் காயமுற்ற வேலுப்பிள்ளை செல்லம்மா (வயது 80) என்ற வயோதிப மாது மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இவர் நேற்று மாலை சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டார்.

குண்டு வீச்சு நடந்தபோது வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்த பே. மங்களா (வயது 13) என்ற பாடசாலை மாணவியும் இச்சம்பவத்தில் காயமுற்றார்.

மணற்காட்டுப் பகுதியில் குண்டு வீச்சை நடத்திய விமானங்கள் பருத்தித்துறை ஆனைவிழுந்தான் பகுதியைச் சுற்றி வட்டமிட்டுவிட்டு பலாலிக்குத் திரும்பிச் சென்றன.

குடத்தனைப் பகுதியில் குண்டு வீச்சு நடந்த சமயம் அருகில் சுமார் ஐம்பது யார் தூரத்தில் குடத்தனை மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றுகொண்டிருந்த மாணவர்கள் கலைந்து ஓடி பாதுகாப்பான இடங்களில் ஒதுங்கிக் கொண்டனர்.

பின்னர் நண்பகல் ஒரு மணியளவில் ஒரு ஹெலிக்கொப்டர் சகிதம் மீண்டும் வந்த நான்கு பொம்மர்கள் ஆனைவிழுந்தான் பகுதியில் இரண்டு குண்டுகளையும் உபய கதிர்காமம் பகுதியில் இரண்டு குண்டுகளையும் மாறி மாறி வீசின.

இக்குண்டு வீச்சால் வெற்றிலைக்கேணியிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவரான மா. ஜேசுதாசன் (வயது 46) காயமடைந்தார். இவர் பின்னர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

ஆனைவிழுந்தான் பகுதியில் வீசப்பட்ட குண்டுகள் பனங்கூடலுக்குள் வீழ்ந்து வெடித்ததால் பல பனை மரங்கள் சேதமாகின.

நேற்று குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்ற பகுதிகளை நேற்று முன்தினம் மாலை அவ்ரோ விமானம் ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றது குறிப்பிடத்தக்கது.

(உ-5-15-118-144-165)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரவேல் பற்றிய அரசின் கொள்கை மாறவில்லையாம்

## அமைச்சர் ரணில் சொல்கிறார்

கொழும்பு, அக். 24
இஸ்ரவேல் பற்றிய அரசாங்கத்தின் கொள்கை மாறவில்லை.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு கூறினார்

"விடுதலைப் புலிகள்—மொஸாட் உளவுப்படை உறவை பிரதமர் விஜேதுங்கா முழுமையாக நிராகரிக்கவில்லை. இந்த உறவை நிரூபிக்க ஆதாரமில்லை என்று தான் பிரதமர் கூறியிருக்கின்றார்.

"எப்படியிருப்பினும் இந்த விவகாரத்தை மேலும் ஆராய்வோம்"— என்றும் அவர் சொன்னார்.

இஸ்ரவேல் மொஸாட்-விடுதலைப் புலிகள் உறவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரப்பிடம் ஆதாரம் இருக்கலாம். அது பற்றி நான் அவரிடம் விசாரித்து அறியவில்லை. இஸ்ரவேல் தொடர்பான அரசின் கொள்கையில் மாற்றம் ஏதும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்-இவ்வாறு கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(த-எ)

### உதைபந்தாட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை, அடுத்த ஆட்டத்தில் பங்கு கொள்ளவிருந்த அணியின் ஆதரவாளர்கள் தாக்கியதாக கூறப்படுகிறது.

இதனையடுத்தே கோஷ்டி மோதல் உருவானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வீதிகளில் ஆங்காங்கே தடிகள், பொல்லுகள், சைக்கிள் செயின், இரும்புக் கம்பிகள், கற்கள் ஆகியவை சகிதம் குழுக்கள் குழுக்களாகக் கூடி நின்ற ஆதரவாளர்கள் ஒருவரை ஒருவர் கலைத்து, கலைத்து தாக்க முற்பட்ட போது பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று மாலை ரமேஸ்வரம் சந்தி, பிறவுண் வீதி—அரசடிச் சந்தி, கந்தர்மடம் நாவலர் வீதி—கஸ்தூரியார் வீதிச்சந்தி, மனோகரா சந்தி, ஐந்து சந்தி ஆகிய பகுதிகளிலேயே பெரும் பரபரப்பு நிலைமை காணப்பட்டது.

கைகலப்பு ஏற்பட்டது பற்றி தகவல் கிடைத்ததும் காவல் துறையினர் அப்பகுதிகளுக்கு விரைந்தனர்.

வீதிகளில் கைகலப்பில் ஈடுபட்ட தாசச்சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட விளையாட்டு வீரர்கள், ஆதரவாளர்கள் உட்பட சுமார் இருபது பேர் நேற்று மாலை காவல் துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்து விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும்—

சம்பவத்தில் வழிபோக்கர்கள் சிலரும் போராளி ஒருவரும் தாக்கப்பட்டிருப்பதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் தமிழீழ காவல்துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

உதைபந்தாட்ட வீரர்கள் உதைபந்தாட்ட சீருடையில் வீதிகளில் ''அட்டகாசம்'' செய்வது குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

[உ-5]

## 112 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், அக். 24
யாழ். பல்கலைக்கழக கல்வி — டிப்ளோமா பகுதிநேர, முழுநேர பயிற்சி நெறிகளுக்கு 112 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்தவாரம் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நேர்முகப்பரீட்சையின் போது இவர்கள் தெரிவாகினர்.

பகுதிநேர பயிற்சி நெறிக்கு 100 மாணவர்களும் — முழுநேர பயிற்சி நெறிக்கு 12 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பதிவாளர் திரு. எஸ். பரமேஸ்வரன் தெரிவித்தார். (த-3)

## குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், அக். 24
வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த 3 மாதப் பெண் குழந்தை ஒன்று நேற்று ஆஸ்பத்திரியில் மரணமானது.

நாவற்குழியைச் சேர்ந்த கிறிஸ்டி கஜானி என்ற குழந்தையே மரணமானது.

[உ-15]

## வழக்கு விசாரணை

சென்னை, அக். 24
ஈ. பி. ஆர். எல். எவ் தலைவர் பத்மநாபா உட்பட 14 பேர் கொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் முதல் வாரத்தில் இருந்து சென்னையில் கூடும் இக்கத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது

[உ-எ]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**டானியல் குலசிங்கம் சின்னப்பு**

தோற்றம்: 14 — 04 — 1925
மறைவு: 24 — 10 — 1987

எம்மோடு பிறந்து இடையினில் பிரிந்த இனிய-
எம் சோதரனே!
எளிமையே உருவாய் இனிமையே சொல்லாய்-
இணைந்திடும் பண்பாளனே!
தம்மையே மறந்து சுற்றத்தை நினைந்து
தரணியில் சான்றாக வாழ்ந்தாய்.
இம்மையில் உறவாய்க் கொண்ட எம் நலனை
எண்ணியே இறைவனைப் போற்றி
செம்மையே ஆய திருப்பதம் நண்ணி
சென்றிட்ட உம் ஆன்மா சாந்தி!

-சின்னப்பு குடும்பத்தினர்.

374, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(22989)

---

ஐரோப்பிய குடும்ப அமைப்பு

# புகலிடம் கோரி வருபவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும்?

லண்டன், அக். 24
ஐரோப்பிய குடும்ப அமைப்பு, தத்தம் நாடுகளில் புகலிடம் கோரி வருபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது பற்றி தீவிரமாக சிந்தித்து வருகிறது.

இவ்வாறு பி.பி.ஸி. தெரிவித்தது.

வெளிநாடுகளில் இருந்து வந்து குவிந்து குடியேறுபவர்களின் எண்ணிக்கை அளவுக்கு மீறி அதிகரிப்பதாக மேற்குலக நாடுகளிடையே கருத்தும் கவலையும் எழுந்துள்ளது.

சில இடங்களில் வெளிநாட்டவர்களுக்கு எதிராக வன்முறையும் வெடித்துள்ளது. ஜேர்மனி தனது தாராளமான புகலிடச் சட்டத்தை இறுக்கியிருக்கிறது அரசியல் புகலிடம்வழங்குவதில் கடுமையான விதிமுறைகளை கடைப்பிடித்து வரும் பிரிட்டன் ஐரோப்பிய குடும்ப அமைப்பு நாடுகள் அனைத்தும் இது விடயத்தில் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என நெருக்கடி கொடுத்து வருகிறது.

டிசம்பர் மாதத்தில் எடின்பரோ நகரில் நடைபெறவிருக்கும் ஐரோப்பிய குடும்ப அமைப்பின் மேல்நிலை மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திட்டங்களின்படி —

ஜெனிவா அறிக்கட்டளையின் குறுகிய வரையறைக்குள் வராத எவருக்கும் அகதிகள் அந்தஸ்து வழங்கப்படமாட்டாது. உதாரணமாக உள்நாட்டுப் போரில் இருந்து தப்புவதற்காக அந்நாட்டை விட்டு ஓடிவருபவர்கள் அகதி அந்தஸ்து கோரமுடியாது.

உள்நாட்டுப் போரில் இருந்து தப்புவதற்காக நாட்டைவிட்டு வெளியேறுவது நியாயமான காரணம் என்றாலும் தனிப்பட்ட முறையில் ஆபத்து இல்லை என்பதால் இந்தக் காரணம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

சொந்த நாட்டில் இம்சிக்கப்படுவது என்ற ஐரோப்பிய குடும்ப நாட்டின் வரையறை மானபங்கம், சித்திரவதை, அரசபரப்பு பயங்கரவாதம் போன்றவற்றை உள்ளடக்காது என மனித உரிமை அமைப்புகள் கூறுகின்றன.

இந்தப் புதிய சட்டங்கள் ஆபிரிக்கா, ஆசிய நாடுகளில் இருந்து ஐரோப்பிய நாடுகளிடம் புகலிடம் தேடிவருவதை கடினமாக்கும் எனவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

(த-5)

### கொழும்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு பல நூற்றுக் கணக்கில் முஸ்லிம்கள் சென்றிருந்தனர். அவர்களில் பலர் ஆயுதங்களை வைத்திருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

அப்பகுதியில் பெரும் எண்ணிக்கையில் கலகம் அடக்கும் பொலீஸாரும் கேடயங்கள் மற்றும் குண்டாந் தடிகளுடனும் பொலீஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில் பள்ளிவாசலைச் சுற்றியுள்ள கட்டடங்களில் வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை ஏந்தி கொண்டு முஸ்லிம் அல்லாதோர் நுழைந்தனர்.

இதைக் கண்ட முஸ்லிம்கள் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் பொங்கி எழுந்தனர்; கோபமாகக் கூச்சலிட்டனர். கற்களையும் சரமாரியாக வீசித் தாக்கத் தொடங்கினர்.

அட்டைகளுடன் கட்டடங்களுக்குள் நுழைந்த கும்பல்களில் இருந்த பெரும்பாலானோர் அரசுக்கு ஆதரவானவர்கள் என்று கூறப்பட்டது.

முஸ்லிம்களின் தாக்குதலைக் கண்ட அந்தக் கும்பல் பின்வாங்கி ஓடியது.

அதனால் முஸ்லிம்களின் கோபத்தை பொலீஸார் எதிர்நோக்க வேண்டியதாயிற்று. முஸ்லிம்களின் தாக்குதல்கள் அதிகரிக்கவே பள்ளிவாசலைச் சுற்றியுள்ள கட்டடங்கள் மீது பொலீஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். இதனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர். தப்பி ஓடிய முஸ்லிம் இளைஞர்களைப் பொலீஸார் சற்று தொலைதூரம் வழியாகத் துரத்தி அடித்தார்கள்—என்று கூறப்படுகிறது.

ஆத்திரமுற்ற முஸ்லிம்கள் பஸ்களுக்கு தீ வைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலவரத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பலரும் பொலீஸார்பலரும் காயமுற்றனர் என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

நேற்றைய கலவரத்தால் தொழுகை நடக்க வேண்டிய [illegible] தெரிவிக்கப்பட்டது. [உ-த-எ-5]

பாதுகாப்பு துணை அமைச்சர்

# விஜயதுங்காவுக்கு பதிலாக புதியவரை நியமியுங்கள்!

## ஆங்கிலப் பத்திரிகை கோரிக்கை

கொழும்பு, அக். 24
பிரதமர் டி. பி. விஜேதுங்க பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் திறமைமிக்க இன்னொருவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட வேண்டும்.

—இவ்வாறு கொழும்பு பத்திரிகை 'த ஐலண்ட்' தனது ஆசிரியர் தலையங்கத்தில் கேட்டுள்ளது.

பொலன்னறுவை படுகொலையைத் தொடர்ந்து எழுதப்பட்ட ஆசிரிய தலையங்கத்திலேயே இக் கோரிக்கையை இப்பத்திரிகை விடுத்துள்ளது.

சட்டசபையைக் கலைத்து

# திடீர் தேர்தல் நடத்த ஜெயலலிதா திட்டம்?

சென்னை, அக். 24
தமிழக சட்டசபையைக் கலைத்து விட்டு திடீர்த் தேர்தல் நடத்துவது தொடர்பாக தேர்தல் ஆணையாளருடன் முதலமைச்சர் ஜெயலலிதா பேச்சுக்கள் நடத்தியிருக்கிறார்.

இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. குமரி அனந்தன் இத்தகவலை வெளியிட்டார்.

இதற்கிடையில் —

ஜெயலலிதாவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக சுப்பிரமணியசுவாமி தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் செயற்குழுக்களின் நடவடிக்கைகளை தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி வரவேற்றுள்ளார்.

[உ-எ]

# ஜெயலலிதாவுக்கு எதிராக தி.மு.க வினர் 'பந்த்'!

சென்னை, அக். 24
முதலமைச்சர் ஜெயலலிதா பதவி விலகாவிட்டால் அடுத்த மாதம் 25 ஆம் திகதி தமிழகத்தில் 'பந்த்' நடத்தப்படும் என்று தி.மு.க. அறிவித்துள்ளது.

முதலமைச்சர் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய மாநில ஆளுநர் அனுமதி தராதபட்சத்தில் தி. மு. கவினர் நீதிமன்றம் செல்வதாக முடிவு செய்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

அரசமைப்புச் சட்டத்தின் 190, 191 ஆம் ஷரத்துகளை மீறிவிட்டதற்காக சட்டசபை உறுப்பினர் பதவியில் இருந்து செல்வி ஜெயலலிதாவை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் ஆளுநர் பதவி நீக்கம் செய்யாவிட்டால் புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி அறிவித்துள்ளார்.

# அரச ஊழியரின் விடுமுறை; மாற்றம் செய்யப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், அக். 24
அரச ஊழியர்களின் விடுமுறைகள் தொடர்பாக மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளர் வெளியிட்டுள்ள 27/92 இலக்க 7-10-92 திகதியிடப்பட்ட இந்த சுற்றுநிருபம் யாழ். செயலகத்துக்கு கிடைத்துள்ளது.

அரச ஊழியர்கள் சுகயீனம் காரணமாக வேலைக்கு 2 நாட்களுக்கு மேல் சமுகமளிக்காது விட்டால் மருத்துவ சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் — தொடர்ந்து ஆறுநாட்கள் வரை அவர்கள் விடுமுறை எடுக்கலாம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த விடுமுறையை விடுப்பு லீவில் கழிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இந்த வகையான லீவுகள் சமயாசமய லீவில் கழிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

(த-3)

## மரண அறிவித்தல்

### திருமதி யசிந்தா சில்வஸ்ரர்

யாழ்ப்பாணம் 5 ஆம் குறுக்குத்தெருவை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்தவருமாகிய திருமதி யசிந்தா சில்வஸ்ரர் அவுஸ்திரேலியாவில் 22-10-1992 இல் காலமாகி விட்டார். இவர் சில்வஸ்ரரின் (அவுஸ்திரேலியா) அன்பு மனைவியும், சர்மிளா (அவுஸ்திரேலியா) வின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற ராஜரட்ணம், நீற்றா (கனடா) தம்பதிகளின் அன்புப் புதல்வியும், அந்தோனிப்பிள்ளை (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற நல்லம்மா ஆகியோரின் அருமை மருமகளும், இரத்தினதேவி, ஜறின், தங்கராஜா (கனடா), மேவின் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிலோமினா, பேபி, சறோ (கனடா), சாந்தி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற மரியாம்பிள்ளை (அட்வகேட்), சச்சிதானந்தம் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியும், யோகதாசன், செல்லத்தம்பி (கனடா), யோகராஜா (இந்தியா), எல்மோ (அவுஸ்திரேலியா) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றன என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

41/18, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

[23003]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org